# நியாயத்தீர்ப்பு நாள்

*“உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள். ஏசாயா* 26:9

நியாயத்தீர்ப்பு நாள் அநேகருக்குப் பயத்தையும் திகிலையும் உண்டாக்குகிறது. ஏனெனில் அந்நாளில் மாபெரும் பயங்கரமான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும், மரித்த கோடானுக்கோடி மக்களில் சிலர் இயேசுவினிடத்திலிருந்தும், அநேகர் நரகத்திலிருந்தும் உயிரடைந்து நியாயத்தீர்ப்பைப் பெற்று திரும்பவும் பரலோகத்திற்கும், நரகத்திற்கும் முறையே அனுப்பப்படுவார்கள் என்றும் அநேக கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இதற்கிசைவாக நியாயத்தீர்ப்பு நாளை ஒரு தீர்ப்பு கூறும் நாள் என்றும் ஆக்கினை நாள் என்றும் அழைக்கிறார்கள். இது 24 மணி நேரம் கொண்ட நாள் என்றும் கருதுகிறார்கள்.

## அபிப்பிராயத்தில் எழும் சில கேள்விகள்

மனிதன் ஆதாமுக்குள் சபிக்கப்பட்டு அடைந்து கொண்டிருக்கும் தண்டனையாகிய பாவம், வியாதி, மரணம் தேவனின் கோபத்தை திருப்தி செய்யவில்லையோ? திரும்பவும் உயிரடையச் செய்து நித்திய வேதனையை கொடுப்பாரேயானால் அவர் இவ்வளவாய் (யோவான் 3:16) உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்ற சத்தியத்தின் அர்த்தம் பொய்யாகிறதே. ஒரு வேளை தன்னை ஏற்றுக் கொண்டவர்களை மாத்திரம் உயிர்தெழுதலில் எழுப்பி ஆசிர்வதித்தாரேயானால் அதுவே சிறப்பாய் இருந்திருக்குமே.

இயேசு கிறிஸ்துவையும், யெகோவா தேவனையும் சுய அறிவோடு ஏற்றுக் கொள்ளாத எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் (யோவான் 17:3) பங்கு பெற முடியாதே. இப்படியிருக்க, சிசுவாக மரிக்கிறவர்களும், குமாரன் வந்து யெகோவாவை வெளிப்படுத்துவதற்கு முன்பு மரித்த இருண்ட யுக மானிடர்களும், தேவனையும், தேவ குமாரனையும் அறிந்து கொண்டு, நித்திய ஜீவனைப் பெறத் தருணம் கொடுக்கப்படாமலே, நியாயத்தீர்ப்பு நாளில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட உயிர்த்தெழுவார்களேயானால், இஃது எவ்வாறு தேவ நீதியையும் தேவ அன்பையும் தேவ ஞானத்தையும் தேவ வல்லமையையும் சித்தரிக்கும்?

மனிதன் ஒரு போதும் தன்னை மரணத்திலிருந்தோ தனது பாவ நிலையிலிருந்து மீட்கும் படியோ, திரும்பவும் உயிர் பெற்று வாழ வேண்டும் என்றோ தேவனை

வேண்டிக் கொண்டதாகவோ தெரியவில்லை. தேவன் தாமாகவே ஆதாம் பாவம் செய்த சந்தர்ப்பத்திலிருந்து பற்பல காலங்களில் வகைவகையாக பலர் மூலம் தாம் செய்யப்போகிற இரட்சிப்பைக் குறித்து முன்னுரைத்து, குறிப்பிட்ட காலங்களில் நிறைவேற்றியும் வருகிறதற்கு நாமே சாட்சியாக இருக்கிறோம். இப்படியாக சகல பிரயாசங்களையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றி கிரியை நடப்பித்து வருவது, மனிதனுக்கு இழந்து போன ஐக்கியத்தையும் பரிபூரண நிலையையும் திரும்பக் கொடுக்கும் உன்னத நோக்கத்தினாலேயா அல்லது இன்னும் மோசமான நித்திய வேதனை, நரகம் என்றெல்லாம் விவரிக்கப்படும் பயங்கரமான நிலைக்குதள்ளி பழிக்கு மேல் பழி வாங்கும் நோக்கத்தினாலேயா? பழி வாங்கும் நோக்கத்தோடு தன் குமாரனைத் தந்து ஆதாமுக்குள் மரித்த மானிடரை இயேசுவுக்குள் திரும்ப கொண்டு வருவாரேயானால் நாம் பாவிகளாயிருக்கையில் தமது குமாரனை தந்தத்தின் மூலம் யெகோவா தமது அன்பை விளங்கப் பண்ணினார் என்று கூறும் வசனம் பொய்யாகுமே?

ஒரு நல்ல ஜமீன்தார் தனது குற்றம் செய்த வேலைக்காரனை நேசித்தபோதும், சூழ்நிலையின் நிபந்தனையினால் வேலை நீக்கம் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அநேக வருடங்களுக்கு பிறகு அந்த வேலைக்காரன் வறுமையினால் அவதியுறுகிறான் என்று கேள்வியுற்று அவனை அழைத்துவரச் சொன்னால், அதன் நோக்கம் திரும்பவும் அவனை அடித்துப் பழிவாங்கும் நோக்கத்திற்காகவா? நீங்களே அந்த ஜமீன்தாரராக இருப்பின் நல்லதை செய்யமாட்டீர்களோ? அப்படியானால் தேவன் மானிடர் அனைவரையும் எழும்பி வர செய்து தீர்ப்புக் கொடுத்து திரும்பவும் அநேகரை நரகத்திற்குத் தள்ளுவாரேயானால் அவர் நல்லதை செய்ய நினைக்கும் ஜமீன்தாரை காட்டிலும் கேடுகெட்டவரா?

தேவனுக்கும் சாத்தானுக்கும் உள்ள போராட்டத்தில் தமது குமாரனையே முதலீடாக பணயமாகக் கொடுத்திருக்கும் தேவன், ஒரு சிறு மந்தையை மட்டும் இரட்சித்து கொள்வாரேயானால் வெற்றி யாருக்கு? சாத்தானுக்கல்லவா? ஏனெனில் சாத்தானுக்கல்லவோ கிறிஸ்தவ மண்டல பொதுவான தாற்பரியத்தின்படி அநேக மக்கள் கிடைக்கிறார்கள். தேவஞானமும் தேவ வல்லமையும் கேள்விக்குரியதாக ஆகிறதே?

தேவன் ஆபிரகாமை நோக்கி (ஆதி 12:1-3) "நான் காண்பிக்கும் தேசத்துக்குப் போ... பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசிர்வதிக்கப்படும்" என்று கூறினாரே. இந்த ஒப்பந்தத்தின்படி ஆபிரகாம் தான் செய்ய வேண்டிய நிபந்தனையை செய்து முடித்தான். அவன் கீழ்ப்படிந்து தேவன் காண்பித்த தேசத்திற்குச் சென்றான். ஆனால், தேவன் இந்த ஒப்பந்த நிபந்தனையின் தன்னுடைய பகுதியை நிறைவேற்றி விட்டாரா?

ஆதாமுக்குள் எல்லா மனிதரையும் சபித்த தேவன், ஆபிரகாமுக்குள் எல்லா மனிதரையும் ஆசிர்வதிக்கச் சித்தமுள்ளவராய் கூறியிருக்க தாம் செய்ய வேண்டிய ஒப்பந்தத்தின் பகுதியை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை?

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் எல்லாரையும் மீட்கும் பொருளாகவும் (1 தீமோ 2:4,6); எல்லா மனிதருக்காகவும் மரணத்தை ருசிபார்த்ததாகவும் (எபி 2:9); எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி (லூக் 2:10,16); என்றும் கூறப்பட்டிருக்கிறது. நியாயத் தீர்ப்பு நாள் ஒரு பயங்கரமான ஆக்கினையின் நாளாக இருப்பின், எல்லா மனிதருக்கும் வரவிருக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறும் வசனங்களின் நிறைவேறுதல் எங்கே? அவைகள் பொய்யாகுமோ?

இவ்விதமாக அநேக கேள்விகளைக் கேட்க எதுவுண்டு. வேத வசனங்களுக்கும் நாம் பொதுவாக கேள்வியுறும் தாற்பரியங்களுக்கும் முரண்பாடு இருக்கிறதை உதாரணமாக மேற்கண்ட கேள்விகள் வலியுறுத்துகிறது. தேவன் குழப்பங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் தேவனாயிராமல், ஞானத்திற்கும் வல்லமைக்கும் நீதிக்கும் அன்பிற்கும் தேவனாயிருக்கிறார்.

## நியாயத்தீர்ப்பு எனும் சொல்லின் பொருள்

நியாயத்தீர்ப்பு என்றால் தீர்ப்பு சொல்லுதல் என்ற கருத்தில் மட்டுமே கிறிஸ்தவ சமுதாயத்தில் பொதுவாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். நியாயத்தீர்ப்பு என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் ஜட்ஜ்மெண்ட் (Judgement) என்கிறோம். இந்த ஜட்ஜ்மெண்ட் எனும் ஆங்கில வார்த்தையின் அர்த்தம் என்ன?

மாட்டின் பற்களை எண்ணி அதன் வயதை நிதானிக்கிறார்கள். தங்கத்தை உரசிப்பார்த்து அதன் தூய நிலையைக் கணிக்கிறார்கள். சமையல் செய்யும் போது பதார்த்தத்தை ருசிப்பார்த்து அதன் ருசிநிலையை நிதானிக்கிறார்கள். வாகனம் ஓட்டுகிறவர்கள் பிறவாகனங்களின் ஓட்டு நிலையை கணித்து தனது நிதானிப்பை உபயோகித்து ஓட்டுகிறார்கள். இவ்விதமாக வாழ்க்கை முழுவதும் தூங்கி எழும்பியதிலிருந்து தூங்கும் வரை எல்லா காரியத்திலும் நிதானித்து கணித்து செயலாற்றுகிறோம். இவ்விதம் நிதானித்து அறிந்து செயலாற்றும் திறனுக்கே ஜட்ஜ்மெண்ட் என்ற வார்த்தையைப் பயன்படுத்துதல் சரியாகும். நீதிமன்றங்களிலும் வழக்கை நிதானித்து அறிந்து கணித்த நீதிபதியின் கணிப்புக்கே ஜுட்ஜ்மெண்ட் என்று பொருள் கூறுகிறோம். இந்த ஜட்ஜெமென்ட்க்கு பின்னர் அதற்குரிய குற்றவாளிக்கு மட்டுமே தண்டனை, அதுவும் அவன் திருந்துவதற்காகவே கொடுக்கப்படுகிறது. நீதி மன்றங்கள், சட்டங்கள், தண்டனைகள் எல்லாம் சமுதாய வாழ்க்கைக்கு வேண்டிய ஜட்ஜ்மெண்டை நிதானித்து செயல்புரியும் திறனைக் கொடுக்கவே அமைக்கப்பட்டுள்ளன.

சங் 106:3 ஜட்ஜ்மெண்டை காத்துக் கொள்கிறவர்கள் பாக்கியவான்கள் என ஆங்கில வேதத்தில் கூறப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

சங் 19:9, 10 ஜட்ஜ்மென்ட்டை பொன்னிலும் பசும் பொன்னிலும் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதாயிருக்கிறது.

மெய்யாகவே கர்த்தருடைய ஜட்ஜ்மென்ட் (நியாயத்தீர்ப்பு) பயங்கரமான ஆக்கினை எனும் கருத்துடையதாக இருப்பின், சங்கீதக்காரன் கூறுகிறவிதமாய் பொன்னை விட, தேனைவிட வாஞ்சிக்க மனம் சாயுமோ? (ஏசா 56:8-15, மத் 23:23)

## மூல வார்த்தையின் பொருள்

நியாயத் தீர்ப்பு நாள் - 'Day of Judgement' என்ற சொற்றொடரில் நியாயத் தீர்ப்பு எனும் சொல்லுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மூல கிரேக்கச் சொல் கிரிஸிஸ் (Krisis) அல்லது க்ரினோ (Krino) - இதற்குரிய எபிரேயச் சொல் மிஷ்பட் (Mishphat). இந்த மூலச் சொல்லுக்கு நான்கு பொருள்கள் உண்டு.

1.கற்பித்தல்: சங் 25:89 ஆங்கில வேதத்தின்படி கர்த்தர் நல்லவரும் நேர்மையுமானவர். ஆதலால் நடக்க வேண்டிய பாதையில் நடக்க அவர் பாவிகளுக்குக் கற்றுக் கொடுப்பார். அவர் எளிமையானவர்களை நியாயத்தீர்ப்பில் (Judgement) தமது வழியில் நடத்தி, அவர்களுக்கு தமது பாதையைக் கற்றுக் கொடுப்பார். சங்:119: 108 உம்முடைய Judgement - ஐ தெளிவுபடுத்துவார். ஏசா 26:9 ஐயும் வாசிக்கவும். இவைகளெல்லாம் ஜட்ஜ்மென்டில் நடக்கும் கற்பித்தல் என்ற அம்சத்தை விளக்குகிறது.

2. சோதித்தல் : சங் 26 :1 கர்த்தாவே என்னை நியாயம் விசாரியும் ( ஜட்ஜ் பண்ணும் ) , 2 தெச 1 : 4,5 வசனங்களை ஆங்கில வேதத்துடன் ஒப்பிட்டு படிக்கவும். தெசலோனிக்கேய பரிசுத்தவான்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு பாத்திரவான்கள் ஆகும்படிக்கு உபாத்திரவங்களினாலும், பரீட்சையினாலும், சகிப்பு, பொறுமை, விசுவாசம் முதலிய அனுபவத்தைப் பெற்றனர். இந்த அனுபவம் தேவனுடைய நீதியான ஜட்ஜ்மென்டின் விளைவை விளங்கப் பண்ணும் அடையாளமாக இருக்கிறது. இதிலிருந்து **Judgement**ன் ஒரு அம்சம் சோதிக்கப்படுதல் அல்லது பரீட்சிக்கப்படுத்தல் என அறிகிறோம்.

3. சிட்சித்தல் : மேற்கண்ட 2 தெச 1 :4,5 - ல் நாம் ஏற்கனவே பார்த்தபடி பரீட்சித்தல் உபத்திரவம் அதாவது சிட்சை இருப்பதாக அறிகிறோம் ஏசா 2:4 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். இந்தக் கடிந்து கொள்ளுதல் என்ற கருத்து நியாயத் தீர்ப்பு காலத்தில் நடக்கும் சிட்சையைக் குறிக்கிறதல்லவா. 1

கொரி 11: 33 "நாம் நியாயந்தீர்க்கப்படும் பொழுது .......... கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்" எனக் கூறியிருப்பதிலிருந்து (1 கொரி 11: 32) நிதானிக்கும் திறனை ஜட்ஜ்மெண்ட் (Judgement) சிட்சையின் மூலமே ஒருவன் பெறுகிறான் என்று அறிகிறோம்.

4. தீர்ப்பளித்தல்: மத் 7: 1, 2 ("நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்") யோவா 7: 24 - ("தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள்") உபா 1 : 16 (........ அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும் நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள்") இவைகளிலிருந்து ஜட்ஜ்மெண்ட் (நியாயத்தீர்ப்பு) என்ற பதத்திற்கு தீர்ப்பு என்ற கருத்தும் இருக்கிறதை பார்க்கிறோம்.

எனவே, ஜட்ஜ்மெண்ட் என்ற வார்த்தைக்கு கற்பித்தல், அதாவது நியாயங்களை கற்பித்தல், சோதித்தல் அதாவது நியாயங்கள் கற்றதின் மூலம் உண்டான குணாம்சங்கள் ஜீவனுக்கேற்றவிதமாக இருக்கிறதா என சோதித்தல், சிட்சித்தல் அதாவது குறையிருப்பின் சீர்திருத்தம் செய்ய சிட்சையின் மூலம் உதவுதல், தீர்ப்பளித்தல் அதாவது கற்பிக்கப்பட்டதிலும், சோதிக்கப்பட்டதிலும், சிட்சிக்கப்பட்டதிலும் ஜீவனை பெற கொடுக்கப்பட்ட அனுக்கிரகக் காலத்தில் அடைந்த தேர்ச்சி நிலையைத் தீர்மானித்து பலனளித்தல் என அறிகிறோம்.

## நியாயத்தீர்ப்பு நாள் (Day of Judgement)

நியாயத்தீர்ப்பு நாளில் இந்த அம்சங்களாகிய போதித்தல், பரீட்சித்தல், சிட்சித்தல்,தீர்ப்பளித்தல் ஆகிய நான்கு வேலைகள் செய்யப்படும் என்று இதிலிருந்து யூகிக்க முடிகிறது. இவைகளின் மூலம் ஒருவன் நிதானித்தறிந்து செயலாற்றும் திறனைப் (ஜட்ஜ்மெண்டை) பெற்று நித்திய ஜீவனை அடைவதற்காக ஏற்படுத்தப்பட்ட அனுகூல காலமே நியாயத்தீர்ப்பு நாள் என்று நாம் அறிகிறோம்.

### இது ஒரு ஆக்கினையின் நாளோ?

நியாயத்தீர்ப்பு நாள் ஒரு ஆக்கினையின் நாளாக இருக்குமாயின் ஏசா 53:8 ன் படி இயேசு கிறிஸ்துவும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டாரா? அப்போஸ்தலர்களும் சுவிஷே யுகத்தில் ஆக்கினைக்குள்ளாகத் (1 கொரி 11:32) தீர்க்கப்பட்டார்களா? நியாயத்தீர்ப்பு யூத யுகத்திலும் சுவிசேஷ யுகத்திலும் கூட இருந்ததாக அறிகிறோம்.

பூரண மனிதன் ஆதாம் தனது கீழ்ப்படியாமையினால் தனக்கு கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் காலத்தில் தேவ நீதியைக் கணித்து செயலாற்றாமல் விழுந்து போனான். யூதர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட யூதயுகத்தில், அதாவது தேவ நீதியைக் கணித்து செயலாற்றும் நியாயப் பிரமாணக் காலத்தில் கீழ்ப்படியாது தேவநீதியைக் கற்றுக் கொள்ளாமற் போனார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவோ பட்டபாடுகளினாலே (எபி 5:8, 9) கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் என்று கூறும் போது அவர் தேவ நீதியை நிதானித்து அறிந்து செயலாற்றும் திறனில் முழுமையாக தேர்ச்சி பெற்றார் என்று விளங்குகிறது. அதைத்தான் வேதமும் இடுக்கண்ணிலிருந்தும், நியாயத் தீர்ப்பிலிருந்தும் (ஜட்ஜ்மென்டிலிருந்தும்) அவர் எடுக்கப்பட்டார் என்று கூறுகிறது. (ஏசா 53:8)

இதிலிருந்து இயேசு கிறிஸ்துவுக்கும் யூதயுக நியாயத்தீர்ப்பு (ஜட்ஜ்மென்ட்) இருந்ததாக அறிகிறோம். இதைப் போலவே பரிசுத்தவான்களும் சுவிசேஷயுகத்தில் கீழ்படிதலைக் கற்றுக் கொள்வதற்காக சிட்சிக்கப்பட்டு தேவ நீதியை நிதானிக்கும் திறனை கிறிஸ்துவின் சாயலை நியாயத்தீர்ப்பின் மூலம் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் உலகத்தோடு அல்ல (1 கொரி 11:32) அதாவது பூலோகத்திற்குரிய நியாயத்தீர்ப்பு நாளில் அல்ல, 'இன்று' எனும் (எபி 3:15, 4:11) சுவிசேஷயுகத்தில்தானே நியாயந்தீர்க்கப்பட்டார்கள். இவர்கள் தங்கள் சுய சித்தத்தினால் தாங்களாகவே தங்களை நியாயத்தீர்ப்புக்குள்ளாக்கினார்கள். நாம் பார்த்தபடி நியாயத் தீர்ப்பின் நான்கு அம்சங்களான போதித்தல், பரீட்சித்தல், சிட்சித்தல், தீர்ப்பளித்தல் முறைமையில் கற்று, தேவநீதியைக் கணித்து நிதானித்து செயலாற்றும் திறனை (ஜட்ஜமென்ட்டை) பெற்று விளங்கினார்கள். அவ்விதமான அவர்களது அன்றாட பிரதிஷ்டையின் ஜீவியம், இயேசு காட்டிய இடுக்கமான வழியில் அவர்களை நடத்தி, பரம அழைப்புக்கு பாத்திரமாக்கியது. ஆதலால், தேவன்அவர்களுக்கு உன்னதமான மணவாட்டி சபை அந்தஸ்தை அருளி மகிமை படுத்தியிருப்பதை அறிகிறோம்.

இடுக்கண்ணிலிருந்து எடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்கும் அவரை தொடர்ந்து இடுக்கமான வழியில் சென்ற 'இன்று' எனும் சுவிசேஷயுக பரிசுத்தவான்களுக்கும் நியாயத்தீர்ப்பு ஒரு ஆக்கினையின் நாளாயிருக்கவில்லை. மாறாக, அது அவர்களுக்கு தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடிய ஜட்ஜ்மென்ட்டை (நியாயத்தீர்ப்பை) அடைவதற்கு உகந்த ஆசீர்வாதமான நாளாக இருந்ததைக் காண்கிறோம்.

## மேலும் ஒரு நியாயத் தீர்ப்பு நாள்

***'மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே......... பூலோகத்தை நீதியாய் நியாயந்திருப்பார்' அப் 17:31***

மேலும் என்ற வார்த்தையின்படி நியாயத்தீர்ப்பு நாள் இதற்கு முன்பு இருந்ததாகவும் அதனையடுத்து இன்னும் ஒரு (வேறொரு) நியாயத்தீர்ப்பு நாள் மேலும் குறிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த மேலும் என்ற நியாயத்தீர்ப்புநாள் பூலோகத்தை மட்டும் நியாயந்தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு முந்தைய நாள்தான் 'இன்று' எனும் சுவிசேஷயுகம். அந்த நியாயத்தீர்ப்பு நாள் கீழ்படிந்தவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்க வேண்டும் அல்லவா?

மேலும் என்ற பூலோகத்திற்குரிய நியாயத்தீர்ப்பின் நாளில் பரிசுத்த பெருவழி திறக்கப்பட இருப்பதை நாம் (ஏசா 35:8) வாசிக்கிறோமே. சுவிசேஷயுக நியாயத்தீர்ப்பு காலத்தில் சபை இரட்சிக்கப்பட்டது போல, பூமிக்குரிய நியாயத்தீர்ப்புக் காலத்தில் உலக இரட்சிப்பு நிறைவேற வேண்டுமே (1பேது 1:5, சங் 98:3) சுவிசேஷயுக பரிசுத்தவான்கள் நியாயதிபதியாக பூலோகத்தை நியாயந் தீர்க்க நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது (வெளி 20:4). இந்த நியாயாதிபதிகளை இரட்சகர்கள் என்று ஒபதி 21ல் வாசிக்கிறோம். இவர்கள் மூலம் உலக இரட்சிப்பு நிறைவேறுவதால் இவர்களுக்கு இரட்சகர்கள் என்று பெயர். (ரோம 8:19-22 அப் 15:17 கலா 3:8) கீழ்ப்படிகிற உலக மக்கள் தேவ நீதியைக் கற்று நிதானித்து செயலாற்றும் திறனை பெருங்காலமே பூமிக்குரிய நியாயத்தீர்ப்பு நாள். (ஏசா 26:9) அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்து குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள். அப்பொழுது சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்து இருக்கிறது போல பூமியும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஒருவனும் தன அயலானுக்கு கர்த்தரை அறிந்துகொள் என்று போதிக்கவேண்டியதில்லை. (ஏசா 26:9; எபி 8:9-13; எரே 31:34; ஏசா 11:9,10; 25:6-9, 40:5, 52:10, ஆப 2:14)

ஏசா 2:4,5ன் படி நியாயத்தீர்ப்பு காலத்தில் ஒரு பெரிய மனந்திரும்புதல் உண்டாகும். மனந்திரும்புகிற பாவியான மக்களை தேவனோடு ஒப்புரவாக்கும் வேலையை, ஏற்கனவே சுவிசேஷயுகத்தில் ஒப்புரவாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் செய்வார்கள். (2கொரி 5:18,19) ஒப்புரவாக்கும் வேலையை இவர்கள் செய்வதால்தான் இவர்கள், பிராதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவுடன், ஆசாரியர்களாக அழைக்கப்படுகிறார்கள் (வெளி 20:6) இந்த நியாயத்தீர்ப்பு நாளில் உலக மக்கள் தேவ நீதியை செயலாற்றும் திறனைப் பெற்று, கீழ்ப்படிந்து ஒப்புரவாகி இரட்சிக்கப்படுகிறதை வேதத்தில் அநேக இடங்களில் வாசிக்கலாம் (அப் 15:16,17; ஏசா 11:11; சங் 98:1-6; ஏசா 35:8,10: 60:3,4,6,8,10-12,14: 29:18: 42:3,5; 1பேது 1:5; 1தீமோ 2:6; சங் 22:27)

## நியாயத்தீர்ப்பு நாள் உபத்திரவத்தின் காலம்

ஏற்கனவே நாம் அறிந்தபடி இயேசுவின் நியாயத்தீர்ப்பிலும், பரிசுத்தவான்களின் நியாயத்தீர்ப்பிலும் இடுக்கண்ணும், நிந்தையும், சிட்சையும், நிர்பந்தங்களும், மனவேதனையும், சரீர வேதனையும் இருந்ததுபோல பூலோகத்திற்குரிய நியாயத்தீர்ப்பு காலத்திலும் அவைகள் அனைத்தும் இருக்கும். தேவ நீதியைத் தானாகவே கணித்து நிதானித்து செயலாற்றும் திறனைப் பெறாத கூட்டத்தாரே இந்த பூலோக நியாயத்தீர்ப்பு நாளில் கொடிய உபத்திரவங்களின் மத்தியில் ஐட்ஜ்மெண்ட் பயிற்சியை பெறுவார்கள். இந்த தேவநீதியைக் கற்றுக் கொள்ளுதலுக்காக கடிந்துகொள்ளுதலும் (ஏசா 2:4,5) இருப்புக்கோலும் (வெளி 2:27, ஏசா 11:4) செயல்படுத்தப்படும். உலக மக்களை இவ்வாறு நிர்பந்தத்தின் பேரில் கீழ்ப்படியச் செய்யும் ஊக்குவிக்கியே மகா உபத்திரவமாகும். இதனால் இந்த நியாயத்தீர்ப்புக் காலத்திற்கு மகா உபத்திரவத்தின் காலம் என்ற பெயரும் உண்டு. இதுவும் உலக மக்களின் நன்மைக்கே. நியாயத்தில் ஜெயம் கிடைக்கும் வரை அவர் சோர்ந்துப்போவதுமில்லை. பதறுவதுமில்லை. (ஏசா 42:3,4) இவ்விதமாக தேவ நீதியை நிதானித்து செயலாற்றும் திறனைக் கொடுத்து கீழ்ப்படிதலினாலே தன்னிடம் சேர்ப்பதையே (மத் 25:32) 'அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்' என்ற சத்தியம் விளக்குகிறது.

## நியாயத்தீர்ப்பு நாளும் 24 மணி நேரமும்

பொதுவான வழக்கத்தில் லுத்தர் நாள், மொகலாய நாள், நெப்போலியன் நாள் எனக்கூறும்போது 24மணி நேரங் கொண்ட ஒரு நாளைக் குறிக்காமல் ஒரு காலத்தைக் குறிக்கிறோம் வேதாகம வழக்கத்திலும் ஒரு நாள் என்பது ஒரு காலத்தைக் குறிக்கிறது. சிருஷ்டிப்பின் காலத்தை ஆதி 2:4இல் நாள் என்றும், இஸ்ரவேலரின் வனாந்திர யாத்திரைக் காலமான 40 வருடங்களை சோதனை நாள் என்றும் (சங் 95:10; எபி 3:8,9) சுவிசேஷ யுகம் (2கொரி 6:2; எபி 3:13,15: 1:2) யூத யுகம் (ஏசா 65:2,ரோம 10:21) முதலியவற்றை நாள் என்றும் வேதாகமம் கூறுகிறதைக் காண்கிறோம்.

மேற்கண்ட உதாரணங்களிலிருந்து நியாயத்தீர்ப்பு நாளும் 24 மணி நேரங்கொண்ட நாள் எனக் கணித்தல் தவறு என உணருகிறோம். இது ஒரு காலத்தையுடையது. இந்த நியாயத்தீர்ப்பு நாள் 1000 வருடங்கள் கொண்டது என்பதனை 2பேது 3:7-12ல் கூறியிருக்கிறதைக் காணவும். மேலும், வெளி 20:4,6ன் படி ஆசாரியர்களாகவும், ராஜாக்களாகவும் கிறிஸ்துவுடனே 1000 வருடங்கள் ஆளுவார்கள் என்றும் இந்த ஆயிர வருடங்களில் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு செய்யும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறதை கவனிப்போமாக. இதனால் ஆயிரவருட யுகமும் நியாயத்தீர்ப்பு நாளும் ஏகக்காலம் என்று அறிகிறோம்.

இதுகாறும் படித்தவைகளிலிருந்து நாம் அறிந்து கொண்டவையாவன:

* தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒருவன் பங்கடைய வேண்டுமென்றால் நியாயத்தீர்ப்பு (ஜட்ஜ்மெண்ட்) என்ற முறைமையின் மூலமே வாய்ப்பைப் பெறுகிறான்.

* நியாயத்தீர்ப்பு (ஜட்ஜ்மெண்ட்) என்பது தேவ நீதியைக் கற்று, கணித்து,நிதானித்து செயலாற்றும் கீழ்ப்படியும் திறனை பெற்றுக் கொள்ளுதலே.

* கீழ்படித்தல் மூலம் ஒருவன் நித்திய ஜீவனை பெறுவதற்கு வாய்ப்பாக கொடுக்கப்படுகிற அனுக்கிரக காலமே நியாயத் தீர்ப்பு நாள் ஆகும்.

* நியாயத்தீர்ப்பு நாள் போதித்தல், பரீட்சித்தல், சிட்சித்தல், தீர்ப்பளித்தல் என்ற நான்கு வேலைகளைக் கொண்ட பள்ளிக்கூட காலமாகும் அல்லது பயிற்சி முகாமின் காலமாகும்.

* நியாயத்தீர்ப்பு நாள் என்பது மேற்கண்ட படிப்பினையை அடையும் காலமான 1000 வருடயுகமே. (இயேசுவின் ஆயிர வருட அரசாட்சி மில்லினியம்)

* சுவிசேஷயுக நியாயத்தீர்ப்புக் காலத்தில் நிந்தையும் இடுக்கண்ணும், ஊக்குவிக்கியாக இருந்தது போல பூலோக நியாயத்தீர்ப்பிலும் மகா உபத்திரவங்கள், கற்று கொடுக்கப்படுவதற்காக பயன்படும் உபகரணமாக உந்துவிசையாக இருக்கும்.

* சுவிசேஷயுக நியாயத்தீர்ப்புக் காலத்தில் சபையின் இரட்சிப்பு நிறைவேறியது போல பூலோக நியாயத்தீர்ப்புக் காலத்தில் உலக இரட்சிப்பு நிறைவேறும்.

* சுவிசேஷயுக நியாயத்தீர்ப்புக் காலத்தில் பக்குவப்படுத்தப்பட்ட பரிசுத்தவான்களே, உலகம் பக்குவப்பட்டு தேவனோடு ஒப்புரவாகும்படி ராஜாக்களாகவும், நியாயாதிபதிகளாகவும், ஆசாரியர்களாகவும் இரட்சகர்களாகவும் 1000 வருட பூலோக நியாயத்தீர்ப்பு நாளில் இயேசு கிறிஸ்துவோடு கூட ஆளுவார்கள்.

**சுருங்க கூறின் பரலோகத்தில் பரமபிதாவின் சித்தம் செய்யப்படுகின்றது போல் பூமியிலே செய்யப்படுவதற்கு கொடுக்கப்படும் பயிற்சியே ஜட்ஜ்மெண்ட் என்ற நியாயத்தீர்ப்பு**.

இந்த இயேசுவின் நாள் இழந்து போனதைத் திரும்ப பெறும் காலங்கள் என்றும், தெம்பூட்டும் காலங்கள் என்றும் (அப் 3: 19, 21 ஆங்கில வேதாகமத்தில் காண்க) சீர்த்திருத்தலின் காலம் என்றும் (எபி 9:10) இரட்ச்சிப்பின் நாள் என்றும் (1 பேது 1:5, யூதா 3) பரிசுத்த பெரும்பாதை என்றும் (ஏசா 11:14, 35:8-10) காரண பெயர்களால் அழைக்கப்படுகிறது.

## பேதங்களின் விளக்கம்

யோவான் 5:28,29ன் படி 'தீமையை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருப்பார்கள்' என எழுதி இருப்பது கருத்து பேதத்தை உண்டாக்குகிறது. வேதமாணாக்கருக்காக மொழிபெயர்க்கப்பட்ட **Rotherham Emphasized Bible,** கிரேக்க ஆங்கில Diaglott மேலும் சிறப்பான மொழி பெயர்ப்பையுடைய **American Standard Bible** போன்ற வேதாகமங்களை எடுத்து பாருங்கள். தீமை செய்தவர்கள் நியாயத்தீர்ப்பை (ஜட்ஜ்மென்ட்) அடையும்படி எழுந்திருப்பார்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த மொழி பெயர்ப்பு தேவ நீதிக்கும், தேவ ஒழுங்குக்கும் இசைந்து கருத்து அமைதிக் கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

இந்த 1000 வருடம் முடியும் வரை மரித்தவர்கள் உயிரடையவில்லை என்று வெளி 20:5ல் கூறியிருக்கும் சொற்றோடர், புராதன மூன்றாம் நூற்றாண்ணடைச் சேர்ந்த வேத எழுத்துச் சுவடிகளில் (**Manuscript**) காணப்படவில்லை. பிந்திய காலத்திய சுவடிகளில் இது காணப்படுகிறதால், இந்த சொற்றோடர் ஆரம்பத்தில் இல்லாது இடைக்காலத்தில் நுழைக்கப்பட்டது என்று அறிகிறோம். இது ஆவியினால் அருளப்படாது, மனிதனால் கூட்டப்பட்ட வசனமாக இருப்பதால் சத்திய ஒருமைப்பாட்டில் ஒருங்கமையாது முரண்பாடான தப்பறைக் கருத்தைப் போதிப்பது தெளிவாக புலனாகிறது.

## நியாயத்தீர்ப்பு நாளும் பலனளித்தலும்

நாம் ஏற்கனவே படித்தவாறு நியாயத்தீர்ப்பு (ஜட்ஜ்மெண்ட்) என்ற வார்த்தைக்கு போதித்தல், பரீட்சித்தல், சிட்சித்தல் என்பவைகளோடு தீர்ப்பளித்தல் என்ற கருத்தும் உண்டு. இதனை செம்மறியாடும், வெள்ளாடுமாக பிரிக்கும் கருத்துக்கு ஒப்பிடலாம். நியாயத்தீர்ப்பு நாளின் முடிவில் கீழ்ப்படிந்த ஒருவன் நிதானிக்கும் திறனைப் பெற்று சரீரம், சிந்தை, சித்தம், இருதயம் ஆகியவற்றாலும் பூரண வளர்ச்சியடைந்து பாவம் செய்வதற்கு முன்னிருந்த ஆதாமைப் போல் பரிபூரணமடைகிறான். இவனை பரீட்சித்து தீர்ப்பு அளிக்க சொற்பக் காலம் தேவன் சாத்தானை அவிழ்த்துவிடுகிறார். இதில் செம்மறியாடுகளாகப் பிரிக்கப்படுகிறவர்கள் தங்களை தேவ நீதிக்கு

கீழ்ப்படித்தலினாலே மெய்ப்பித்து, நித்திய ஜீவனை அடைய பாத்திரவான்களாகுகிறார்கள். கீழ்படியாது தவறுகிறவர்கள் வெள்ளாடுகளாக பிரிக்கப்பட்டு நித்திய ஆக்கினையை அதாவது இரண்டாம் மரணத்தை அடைந்து அழிந்து போகிறார்கள். அவர்கள் ஒருக்காலும் இல்லாதவர்கள் போல ஆகிவிடுகிறார்கள்.

## எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷம்

இவ்விதமாக முந்தைய வகுப்பாரின் கீழ்ப்படித்தலினாலும், பிந்திய வகுப்பார் இல்லாது போவதினாலும் கீழ்ப்படியாமை அவருடைய இராஜ்ஜியத்தில் இருப்பதில்லை. கீழ்ப்படியாமை இல்லாதிருப்பதால் பாவமும் இருப்பதில்லை. பாவம் இல்லாது இருப்பதால் பாவத்தின் சம்பளமான மரணமும் இருப்பதில்லை இப்படியாக கடைசி சத்துருவான மரணமும் இயேசுகிறிஸ்துவினால் பரிகரிக்கப்படுகிறது. (1கொரி 15:26) கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப் பண்ணினார். .........*பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது. (சங் 98:3)*

இது எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் தெய்வீகத்திட்டம். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த தமது வாக்கின் நிபந்தனையை தீர்மானமாக இங்கு நிறைவேற்றுகிறார். ஆதி 12:3; 22:19; மத்தியஸ்தரான இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனாகிய யெகோவாவிடம் சீர்படுத்தப்பட்ட, பூரணமாக்கப்பட்ட சிருஷ்டியை ஒப்படைப்பார். (1 கொரி 15:24) அப்பொழுது இராஜ்ஜியம் யெகோவாவினுடையது. ஆதாம் எந்த இடத்தில் தேவ இராஜ்ஜியத்திலிருந்து பிரிக்கப்பட்டானோ, அதே இடத்தில் மனுக்குலம் இணைக்கப்படுகிறது. இதுவே இரண்டாம் ஆதாமாகிய இயேசுகிறிஸ்து, முதல் வருகையில் ஆரம்பித்து தமது இரண்டாம் முறை வந்திருத்தலில் செய்து முடிக்கும் தியாக வேலையாகும். (வெளி 5: 6-14) இந்த உன்னதமான தெய்வீகத்திட்டம் தேவனுடைய நீதியையும், ஞானத்தையும் , அன்பையும், வல்லமையையும் விளம்புகிறது. ஆம் அவருடைய கிருபையினால் நாமும் தேவனின் மகிமையான குண அம்சங்களை உணர முடிகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் யெகோவாவிற்கே துதி கனம் மகிமை இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக.

*யெகோவா ராஜரீகம் பண்ணுகிறார். பூமி பூரிப்பாகி திரளான தீவுகள் மகிழக் கடவது (சங் 91:1) அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள். (சங் 96:10) P.1:137; E.17:179.*